**செய்தி வெளியீடு**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகிறார் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பெருமிதம்!!!

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பொங்கலூர் லட்சுமி திருமண மண்டபத்தில், தனியார் தொண்டு நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்ட ரூ.2.25 இலட்சம் மதிப்பிலான 3 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பொங்கலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பயன்பாட்டிற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (12.07.2021) வழங்கினார்கள்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது***

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாக ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகிறார். தமிழக அரசு பொறுப்பேற்று கடந்த ஒன்றை மாத காலமாக கொரோனா நோய் தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்டையில் மேற்கொண்டதன் விளைவாக திருப்பூர் மாவட்த்தில் நோய் தொற்றின் தினசரி பாதிப்பு 150 க்கு கீழ் என்ற நிலை உருவாகியுள்ளது. தமிழக அரசு அறிவித்த ஊரடங்கு மற்றும் பொதுமக்கள் வழங்கிய முழு ஒத்துழைப்பின் காரணமாக இன்று கொரோனா நோய்த்தொற்றில்லாத நிலை உருவாகி வருகிறது. கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் சவாலான செயலாக இருந்தது. இதேபோல் வரும் காலங்களிலும் கொரோனா நோய் தொற்று முற்றிலும் இல்லாத நிலை அடைய பொதுமக்கள் அலட்சியமாக செயல்படாமல், ஏற்கனவே தமிழக அரசுக்கு அளித்த ஒத்துழைப்பை மீண்டும் வழங்க வேண்டும். கடந்த ஒன்றை ஆண்டு காலமாக கொரோனா நோய் தொற்று பாதிப்பினால் மிகவும் கடுமையான சூழ்நிலை நிலவி வந்தது. அதே போல்

செய்தித்துறையின் சார்பாக அதிநவீன மின்னனு வீடியோ வாகனத்தின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் திரைப்பட நடிகர்களின் வீடியோ தொகுப்பு கொரோனா விழிப்புணர்வு விளம்பரம் அனைத்து ஊரக மற்றும் நகர பகுதிகளில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியினை பின்பற்றி கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். தற்போது தடுப்பூசிகள் தனியார் மருத்துவமனைகளிலும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழக அரசு தற்பொழுது பொதுமக்களுக்கு தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி , தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் விதமாக அனைத்து பணிகளும் துவங்கப்பட்டுள்ளது. எனவே, நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யக்கூடிய சூழ்நிலை விரைவாக வரவிருக்கிறது. அதற்கு பிறகு அனைத்து திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து பொதுமக்களுக்கு சென்றடையும் சூழல் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்றால் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டு தவணையாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அதே போல் நகர்ப்புற பேருந்துகளில் மகளிர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசமாக பயணம் மேற்கொள்வதற்காக இலவச பேருந்து திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தியுள்ளார்கள். ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3/-ஐக் குறைத்து தமிழகம் முழுவதும் விற்பனையாகி குடும்பத் தலைவிகளின் நன் மதிப்பை பெற்று வருகிறது. இனி வரும்காலங்களிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடையும் வகையில் இன்னும் பல நல்ல திட்டங்களை அறிவித்து செயல்படுத்த உள்ளார்கள் என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, பொங்கலூர் ஏ.எல்.ஆர் நகர்பகுதியில் ரூ.9.60 இலட்சம் மதிப்பிலான 60,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமானப்பணிகளுக்கு பூமி பூஜையிட்டு துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, காங்கேயம் அரசு மருத்துவமனை வளாகத்தில், அரசு மருத்துவமனை பயன்பாட்டிற்காக தமிழ்நாடு ஆசிரியர் சங்க கூட்டமைப்பு சார்பில் வழங்கப்பட்ட ரூ.1.18 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த் மோகன் இ.ஆ.ப., இணை இயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.பாக்கியலட்சுமி, பல்லடம் வட்டாட்சியர் திரு.தேவராஜ், பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தனியார் தொண்டு நிறுவனத்தின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்**